

கடலூரில் பொதுப்பணித்துறை சார்பில், கோட்ட அலுவலக வளாகத்தில், ரூ.4.43 கோடி மதிப்பீட்டில், புதியதாக கட்டி முடிக்கப்பட்ட பொதுப்பணித்துறை கோட்ட அலுவலகம், உட்கோட்ட அலுவலகங்கள் மற்றும் பிரிவு அலுவலக கட்டிடங்கள் திறப்பு விழா மாவட்ட ஆட்சியர் அ.அருண்தம்புராஜ் தலைமையில் நடைபெற்றது. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் கே.என். நேரு, பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், தொழிலாளர் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வெ.கணேசன் ஆகியோர் கலந்து கொண்டு கட்டிடங்களை திறந்து வைத்து, நலத்திட்ட உதவிகளை வழங்கினர். இந்நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர்கள் சபா.இராசேந்திரன், கோ.ஐயப்பன், எம்.ஆர். ராதாகிருஷ்ணன், மேயர் சுந்தரி ராஜா, மாநகர கழக செயலாளர் கே.எஸ்.ராஜா உள்ளிட்ட அரசு நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



ராணிப்பேட்டை நகர தி.மு.க சார்பில் கழக தலைவர் தமிழக முதல்வர் தளபதி அவர்கள் பிறந்தநாள் விழா மற்றும் கழக அரசின் நிதி நிலை அறிக்கை விளக்க பொதுக்கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளரும் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி சிறப்புரையாற்றினார். இதில் கழக சட்டத்துறை இணை செயலாளர் ஐ.பரந்தாமன் எம்.எல்.ஏ., தொகுதி பொறுப்பாளர் சுரேஷ், கழக சுற்றுச்சூழல் அணி மாநில துணை செயலாளர் ஆர்.வினோத் காந்தி, மாவட்ட அவைத்தலைவர் ஏ.கே.சுந்தரமூர்த்தி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜெ.எல். ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ, மாவட்ட பொருளாளர் ஏ.வி.சாரதி, நகர செயலாளர் பூங்காவனம், துணை செயலாளர் குமார், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் எஸ்.வினோத், நகர அவைத் தலைவர் தாமோதரன், மாவட்ட சிறுபான்மை பிரிவு அமைப்பாளர் இசட்அப்துல்லா, மாவட்ட பிரதிநிதிகள் ஜெ.ரமேஷ் கோபி கிருஷ்ணன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ஜெயந்தி திருமூர்த்தி, நகர மன்ற தலைவர் சுஜாதா, தலைமை செயற்குழு உறுப்பினர் க.சுந்தரம் வாலாஜா ஒன்றிய குழு தலைவர் சேஷாவெங்கட் ஒன்றிய செயலாளர்கள் எம்.சண்முகம் ஏ.வி.நந்தகுமார் நகர செயலாளர்கள் து.தில்லை அமின், சுற்றுச்சூழல் அணி மாவட்ட அமைப்பாளர் வேதா சீனிவாஸ், துணைஅமைப்பாளர் சிவா மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.

### தேசிய பொது போக்குவரத்து சிறப்பு விருதுகளில்

# தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு 17 விருதுகள்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் தகவல்!

சென்னை, மார்ச் 4-

அனைத்து இந்திய மாநில சாலைப் போக்குவரத்துக் கழகங்களின் கூட்டமைப்பு (ASRTU) மூலமாக வழங்கப்படும் 2022-23 ஆண்டிற்கான தேசிய பொது பேருந்து போக்குவரத்து சிறப்பு விருதுகளில், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் 17 விருதுகளுக்கு தேர்வாகியுள்ளது என போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் உள்ள அனைத்து மாநில சாலைப் போக்குவரத்துக் கழகங்களின் வளங்கள் மற்றும் செயல்திறனை ஆராய்ந்து பொதுவான கட்டமைப்பின் கீழ் கொண்டு வர 1965-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 13-ஆம் நாள் அனைத்து இந்திய மாநில சாலைப் போக்குவரத்துக் கழகங்களின் கூட்டமைப்பு (ASRTU) ஏற்படுத்தப் பட்டது. இக்கூட்டமைப்பு மத்திய அரசின் சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறையின் கீழ் செயல்பட்டு வருகிறது.

இக்கூட்டமைப்பில் உறுப்பினர்களாக 70 மாநில போக்குவரத்துக் கழகங்கள் உள்ளன.



இக்கூட்டமைப்பு ஆண்டுதோறும் அனைத்து மாநில போக்குவரத்துக் கழகங்களை ஊக்குவிக்கும் வண்ணம் அவற்றின் செயல்திறன்களை ஆய்வு செய்து விருதுகள் வழங்கி வருகிறது.

அதன் அடிப்படையில் தமிழ்நாட்டில் உள்ள அரசு போக்குவரத்துக் கழகங்கள் ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்து விருதுகள் பெற்று வருகின்றன.

தற்போது, முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தல் படியும், எனது வழிக்காட்டுதல்படியும், போக்குவத்துத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களின் கண்காணிப்பின் கீழ், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர்கள் பங்களிப்பு (ம) ஒத்துழைப்புடன், அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் சிறந்த முறையில் பணியாற்றியதின் பயனாக, அனைத்து இந்திய மாநில சாலைப் போக்குவரத்துக் கழகங்களின் கூட்டமைப்பு (ASRTU) மூலமாக வழங்கப்படும் 2022-23 ஆண்டிற்கான தேசிய பொது பேருந்து போக்கு வரத்து சிறப்பு விருதுகளில், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் 17 விருதுகளுக்கு தேர்வாகியுள்ளது.

மொத்தமாக வழங்கப் படும் விருதுகளில் 25% விருதுகளை தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் பெற்றுள்ளது. முதல் பரிசுக்கான 38 பிரிவுகளில் 9 பிரிவுகளிலும், இரண்டாம் பரிசுக்கான 31 பிரிவுகளில் 8 பிரிவுகளிலும் ஆக மொத்தம் 69-ல் 17 பிரிவுகளில் பரிசு பெறுவதற்கு தேர்வாகியுள்ளது. இது மொத்த விருதுகளில் 4கில் ஒரு பங்கு ஆகும்.

இதன்படி, பேருந்துகளில் எரிபொருள் திறனுக்காக (புறநகர்-1000 பேருந்துகளுக்குள்) (Fuel Efficiency Award) முதல் இடத்திற்காகவும், சாலை பாதுகாப்பிற்காகவும் (புறநகர் - 1000 பேருந்திற்குள்) (Road Safety Award), உருளிப் பட்டை செயல்திறனுக்காகவும் (கிராமப்புற பிரிவு) (Tyre Performance AwardRural), பேருந்துகளில் உருளிப் பட்டை செயல்திறனுக்காகவும் (நகர்ப்புற பிரிவு) (Tyre Performance AwardUrban), வாகன பயன்பாட்டிற்காகவும் (கிராமப்புற பிரிவு) (Vehicle Utilization Award Rural), வாகன பயன்பாட்டிற்காகவும் (நகர்ப்புற பிரிவு) (Urban - Vehicle Utilization Award) இரண்டாம் இடத்திற்கும், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிமிடெட் 6 விருதுகள் பெற்றிட தேர்வாகியுள்ளது.

பேருந்துகளில் எரிபொருள் திறனுக்காகவும் (நகர்புறம் - 1000 பேருந்துகளுக்கு மேல்) (Fuel Efficiency Award), உருளிப்பட்டை செயல்திறனுக்காகவும் (கிராமப்புற பிரிவு) (Tyre Performance AwardRural), பேருந்துகளில் உருளிப் பட்டை செயல்திறனுக்கவும் (நகர்ப்புற பிரிவு) (Tyre Performance Award Urban), வாகன பயன்பாட்டிற்காகவும் (நகர்ப்புற பிரிவு) (Vehicle Utilization Award Urban) முதல் இடத்திற்கும், ASRTU தள்ளுபடி விலையில் அதிக பொருட்கள் கொள்முதல் செய்தததற்காக (ASRTU Rebate Award) இரண்டாம் இடத்திற்கும், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட் 5 விருதுகள் பெற்றிட தேர்வாகியுள்ளது.

வாகன பயன்பாட்டிற்காகவும் (கிராமப்புற பிரிவு) (Vehicle Utilization Award Rural), பணியாளர் செயல் திறனுக்காகவும் (நகர்ப்புற பிரிவு) (Employee Productivity AwardRural) முதல் இடத்திற்கும், பேருந்துகளில் டிஜிட்டல் பரிவர்த்தனைக்காக (நகர்ப்புற பிரிவு) (Digital Transaction AwardRural) இரண்டாவது இடத்திற்கும், அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் (தமிழ்நாடு) லிமிடெட் 3 விருதுகள் பெற்றிட தேர்வாகியுள்ளது.

சாலை பாதுகாப்பிற்காக (நகர்ப்புறம் 1000க்கும் குறைவான பேருந்துகள்) (Road Safety Award) முதல் இடத்திற்கும், சாலை பாதுகாப்பிற்காக (புறநகர் - 1001 4000 பேருந்துகள்) (Road Safety Award) இரண்டாவது இடத்திற்கும், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (சேலம்) லிமிடெட் 2 விருதுகள் பெற்றிட தேர்வாகியுள்ளது.

ASRTU தள்ளுபடி விலையில் அதிக பொருட்கள் கொள்முதல் செய்தததற்காக (ASRTU Rebate Award) முதல் இடத்திற்கு, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிமிடெட் ஒரு விருது பெற்றிட தேர்வாகியுள்ளது.

இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**ப.சீ. கிருஷ்ணசாமி**

**மார்ச் 4 (2001)**



**பெரியார் மாவட்டக் கழக பொறுப்பாளர்களில் ஒருவராகவும், பவானி நகரக் கழக செயலாளராகவும் தொடர்ந்து 25 ஆண்டுகள் பணியாற்றியவர்.**

**ஈரோடு மாவட்ட கூட்டுறவு ஒன்றியத் தலைவராகவும், நகர வங்கித் தலைவராகவும் பணியாற்றியவர்.**

**மொழிப்போர் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**“உயிர் கொள்கைக்கு உடல் மண்ணிற்கு என்று நீ கொண்டிருந்த உறுதியும், எதற்கும் கலங்காத உன் உள்ளமும் என் நினைவிலிருந்து என்றைக்கும் மறையாது!” எனத் தலைவர் கலைஞரால் புகழப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**

### 5 வயதுக்குட்பட்ட அனைத்துக் குழந்தைகளுக்கும் போலியோ சொட்டு மருந்து!

# நலமான குழந்தைகளே வளமான எதிர்காலத்திற்கான ஒளி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

**சென்னை, மார்ச் 4 -**

**5 வயதுக்குட்பட்ட அனைத்துக் குழந்தைகளுக்கும் போலியோ சொட்டு மருந்து முகாம்கள் நேற்று நடைபெற்றன. இது குறித்து முதல்வர் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் நலமான குழந்தைகளே வளமான எதிர்காலத்திற்கான ஒளி!" என்று குறிப்பிட்டுள்ளார்.**

தமிழ்நாடு முழுவதும் நேற்று (3.3.2024) போலியோ சொட்டு மருந்து முகாம்கள் நடைபெற்றது.

ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவமனைகள், அங்கன்வாடி மையங்கள், சத்துணவு மையங்கள், பள்ளிகள், முக்கிய இடங்கள் என மொத்தம் 43,051 மையங்களில் இம் முகாம்கள் நடைபெற்றன.

பேருந்து நிலையங்கள், இரயில் நிலையங்கள், சோதனைச் சாவடிகள், விமான நிலையங்களிலும் சொட்டு மருந்து வழங்கப்பட்டது.

இந்த சொட்டு மருந்து முகாம்களில் 5 வயதுக்குட்பட்ட 57.84 இலட்சம் குழந்தைகள் அனைவருக்கும்சொட்டுமருந்துவழங்கப்பட்டது.

முன்னதாக நேற்று காலை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலை தளப் பதிவில், குறிப்பிட்டிருப்பதாவது:

**"அன்பார்ந்த பெற்றோர்களே ஓர் வேண்டுகோள்!**

**போலியோ இல்லாச் சமுதாயம் தொடர, இன்றைய போலியோ சொட்டு மருந்து முகாம்களில் 5 வயதுக்குட்பட்ட அனைத்துக் குழந்தைகளுக்கும் தவறாமல் சொட்டு மருந்து வழங்குங்கள்...**

**நலமான குழந்தைகளே வளமான எதிர்காலத்திற்கான ஒளி!"**

இவ்வாறு முதல்வர் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

### பள்ளிக் கல்வித் துறையில் செயல்படும்

# அனைத்து வகைப் பள்ளிகளின் மேலாண்மைக்குழு உறுப்பினர்கள் பதவிக் காலம் நீட்டிப்பு!

## அரசாணை வெளியீடு!

சென்னை, மார்ச் 4-

தமிழ்நாடு அரசுப் பள்ளிக் கல்வித்துறையின்கீழ் செயல்படும் அரசுத் தொடக்கப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள் ஆகிய அனைத்து வகைப் பள்ளிகளின் சீரான செயல்பாடுகளுக்குத் துணைபுரியும் வகையில், பள்ளி மேலாண்மைக் குழுக்கள் கடந்த 2022 ஆம் ஆண்டு ஏப்ரல், ஜூலை மாதங்களில் திருத்தி அமைக்கப்பட்டன. இந்த அனைத்து வகைப் பள்ளிகளின் மேலாண்மைக்குழு உறுப்பினர்களுடைய பதவிக் காலம் 2024 ஏப்ரல், மே, ஜூலை மாதங்களில் முடிவடைய உள்ளன.

2024-2025-ஆம் கல்வியாண்டில் புதிதாகச் சேரும் மாணவர்களின் பெற்றோர்களையும் உள்ளடக்கிய புதிய பள்ளி மேலாண்மைக் குழுக்களை அமைக்கும் பொருட்டு, 2022-2024 ஆம் ஆண்டிற்கான தொடக்கப் பள்ளிகளுக்கான மேலாண்மைக் குழு உறுப்பினர்களின் பதவிக் காலம் 1-5-2020 முதல் 10-8-2024 வரையும், நடுநிலைப் பள்ளிகளுக்கான மேலாண்மைக்கு உறுப்பினர்களின் பதவிக் காலம் 24-4-2024 முதல்

20-7-2024 வரையும், உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளின் மேலாண்மைக்குழு உறுப்பினர்களின் பதவிக் காலம் 10-7-2024 முதல்

17-8-2024 வரையும் நீட்டிக்கப்பட்டுள்ளது என்றும், இதற்குரிய அரசாணை 29-2-2024 அன்று வெளியிடப்பட்டுள்ளது என்றும் பள்ளிக் கல்வித்துறை அரசுச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

### கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம்

# குருந்தன்கோடு மேற்கு ஒன்றியம் - திங்கள் நகர் பேரூர்க் கழகப் பொறுப்பாளர் நியமனம்

## தலைமைக் கழக அறிவிப்பு

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், குருந்தன்கோடு மேற்கு ஒன்றியம், திங்கள்நகர் பேரூர்க் கழகச் செயலாளராகப் பணியாற்றி வரும் சி.பாபுராஜ் அவர்கள் உடல்நலக்குறைவு காரணமாக, தான் வகித்து வரும் பொறுப்பிலிருந்து விடுவித்துக் கொண்ட காரணத்தால், அவருக்குப் பதிலாக, **திரு.அ.சேவியர் ஏசுதாஸ்** (10-205/1, ஆரோக்கியபுரம், திங்கள் நகர், நெய்யூர் அஞ்சல், கன்னியாகுமரி மாவட்டம்) அவர்கள் திங்கள்நகர் பேரூர்க் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட பேரூர்க் கழக நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றிட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை - 18
நாள்- 3-3-2024

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்
தி.மு.க.




திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி நகர தி.மு.க. சார்பில் நடைபெற்ற ‘எல்லோருக்கும் எல்லாம்’ தமிழ்நாடு முதல்வர், கழக தலைவர் தளபதியார் அவர்களின் பிறந்தநாள் மற்றும் நிதிநிலை அறிக்கை விளக்கப் பொதுக்கூட்டத்தில் தலைமைக் கழக செய்தி தொடர்பு செயலாளர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் சிறப்புரை ஆற்றினார். உடன் மாவட்ட கழக செயலாளர் க.தேவராஜிஎம்.எல்.ஏ, நகர செயலாளர் வி.எஸ்.சாரதி குமார், அ.செ.வில்வநாதன்எம்.எல்.ஏ., மாவட்ட அவைத் தலைவர் ஆர்.எஸ்.ஆனந்தன், மாவட்ட துணைச் செயலாளர்கள் ஆ.சம்பத்குமார், சாந்திசீனி வாசன், தலைமை செயற்குழு உறுப்பினர் மு.அசோகன், ஒன்றிய செயலாளர்கள் எஸ்.தாமோ திரன், வி.எஸ். ஞானவேலன், கே.ஆர்.திருப்பதி, டி.சாமுடி, பேரூர் செயலாளர்கள் ம.ஶ்ரீதர், ஆ.செல்வராஜ், நகராட்சிதலைவர்உமாபாய்சிவாஜிகணேசன், பொதுக்குழுஉறுப்பினர்கள்எம்.விமலன், கோவிந்தம்மாள்பெருமாள், நாட்றம்பள்ளி ஒன்றிய குழுத் தலைவர்கள் வெண்மதி சிங்காரவேலன், சங்கீதாபாரி, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வீ.வடிவேல், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் ஏ.சி.தேவகுமார், மாவட்ட விவசாயி அணி அமைப்பாளர் பூ.சதாசிவம், மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் மஞ்சுளா மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.